மூலம்
பகவான் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்திய சாய் பாபா

தமிழாக்கம்
**என்.கஸ்தூரி,** எம்.ஏ.பி.எல்

## ௨. பிறரிடம் குறை காணாதே

**பக்தன் :** இறைவா, நின் மலர்த்தாள் போற்றி, சுவாமி, நமஸ்காரம்.

**சுவாமி :** உன்னுடைய வருகை கண்டு மகிழ்கிறேன். மிகவும் களைப்புற்றிருக்கிறாய் போலும்! இந்தக் கோடையில் பிரயாணம் செய்தாலே களைப்பாய்விடும். சிறிது நேரம் ஓய்வுகொள்; பிறகு பேசலாம்.

**பக்தன் :** உள்ளத்தில் அமைதி இல்லாதபோதும் ஓய்வுக்கு இடம் எங்கே சுவாமி?

**சுவாமி :** மைந்த, நன்று சொன்னாய்! ஓய்வே மன அமைதிக்காகத்தான். ஒருமுறை நீ அமைதி பெற்று விட்டால், பின் ஓய்விற்கு அவசியம் ஏது? புண் குணமாகும் வரைதான் கட்டு அவசியம். அதற்குப் பிறகு அதனால் என்ன பயன்?

**பக்தன் :** இப்பொழுது எனக்கு மன அமைதி இல்லை! என்னால் எதையுமே முடிவு செய்ய இயலவில்லை. என் செய்வேன்?

**சுவாமி :** நன்று, நன்று. காரணமின்றிக் காரியமில்லை. இப்போதைய நிலைக்குக் காரணம் நீ நன்கு அறிவாய். நீ எதையும் செய்ய வேண்டாம். இத்தகைய துன்பநிலையில் சிறிது நேரம் தனியே இருந்து இறைவனின் திருநாமங்களைக் கூறு. அல்லது உரத்த குரலிலே, இறைவனது புகழைப்பாடு. அதுவும் இயலா விடில் படுக்கை விரித்துச் சிறிது நேரம் உறங்கு. பிறகு, இதைப் பற்றியெல்லாம் உன்னால் சிந்திக்கக்கூடும்.

**பக்தன் :** இவ் வுலகில் ஒவ்வொருவரும் எதையாவது மிக அன்புடன் நேசிக்கின்றனர். அப் பொருளினால்

ஏதாவது துன்பம் நேரிட்டால், அவர்கள் மன அமைதியை இழக்கின்றனர். அல்லவா? நான் போற்றும் பொருளை, மற்றொருவன் இகழ்ந்தாலோ அல்லது அதனிடம் குறை கண்டாலோ, எனக்கு எப்படி மன அமைதி இருக்கும்? அதற்கு நான் என் செய்வது?

**சுவாமி :** நன்று, நன்று. ஆன்ம விசாரம் அறிந்த ஆன்றோர், பிறர் போற்றும் பொருள்களில் எக் குற்றமும் காணார். அத்தகைய உள்ளம் படைத்தோரிடமும் நெருங்கார். பிறர் இன்பத்திலே குறை காண்பானைத் தன்னுடைய இன்பத்திலே குறை கண்டவனாகவே கருதி, வருந்தி, அவனுடன் வாதம் செய்வர். எனவே, இவ்வாறு குறை கூறுவோர் ஆன்ம விசாரத்தை அறியாத அறிவிலிகளே என்று தெளிந்து அமைதி யுறுவாயாக! நீ ஆன்ம விசாரத்திலே ஈடுபாடு கொண்டால், ஆன்ம விசாரத்தை அறியாத அந்த அறிவிலிகளால் ஆவதொன்றுமில்லை. நன்று, நன்று. அதை விடுக! உனக்கு இத்தகைய எண்ணம் உண்டாகக் காரணம் யாது? மறைக்க வேண்டாம். உள்ளத்திலே உள்ளதை வெளியிட்டு விட்டால் எல்லாத் துன்பங்களும் நீங்கிவிடும்.

**பக்தன் :** அறநெறியிலே வாழ எத்தகைய வீரத்தையும் வலிமையையும் மக்களுக்கு அளித்து வழிகாட்டியாக வாழ்கிறீர்; உள்ளத்தால் உடலால் கல்வித்துறையிலும், மருத்துவத் துறையிலும் எத்தகைய அருந்துணை புரிகின்றீர். இவைகளை இவ் வுலகம் நன்கு அறியும். தாங்கள் எவருக்கும் எத்தகைய துன்பமும் நேர விடுவதுமில்லை. இத்தகைய புருஷோத்தமனாகிய தங்களைப் பற்றிக் கூறுவன போன்ற கட்டுக் கதைகளைக் கற்பனை செய்து பரப்புவோனின் வாயை எவ்வாறு அடைப்பதோ? அவர்களுக்கு இதனால் என்ன பயனோ?

**சுவாமி :** ஓ! இதுவா கதை! இதை அறியாயா? நல்லதும் கெட்டதும் இவ் வுலகத்திலே இயற்கை; இயல்பு. விற்போராகவே யாவரும் இருப்பின், வாங்குபவர்தாம் யார்? இறைவனிடத்திலே குறை காணுவது என்பது ஒரு புதிய படைப்பல்ல. இது தொன்று தொட்டே இருந்து வருகிறது.

ஆனால், தற்போது வாழ்வோர் சில புதிய கதைகளைப் படைத்திருக்கலாம்.

நன்று. மற்றவர்களின் தூற்றுதலுக்கு நீ ஏன் செவிசாய் கிறாய்? இவ்வாறு பழிப்பதனாலேயே அவர்கள் இறைவனை நினைத்துப் போற்றுகிறார்கள் என்று எண்ணிக்கொள். இறைவனைப் போற்றுதலில் இரண்டு வகை: ஒன்று, 'பிரேம ஸ்மரணா' அன்பால் போற்றுதல். மற்றொன்று, 'துவேஷஸ்மரணா.' துவேஷ ஸ்மரணா என்பதுதான் அவித்ய மாயை. இது ரஜோ குணத்தைச் சார்ந்தது. பிரேம ஸ்மரணா என்பதுதான் வித்யமாயை. இது சத்வ குணத்தைச் சார்ந்தது. அவித்ய மாயையின் பயன் துக்கம்; வித்ய மாயையின் பயன் இன்பம். அவைகளின் பயன் அச் சொற்களிலேயே அமைந்து கிடக்கிறது. இப்பொழுது நீ ஏன் மறைக்கிறாய்? அதனால் என்ன பயன் என்று கேட்க விரும்புகிறாய். அல்லவா?

அவர்கள் எந்த நன்மையையும் வேண்டார். மற்றவர்களிடம் குறை காணுவதே அவர்களது தொழில். அதைக் கடமையாகவும் கருதிச் செய்கின்றனர். பழமொழி ஒன்றுண்டு: இராமபாண கரையான் பூச்சிக்குப் பொன்னாடையானால் என்ன, பருத்தியாடையானால் என்ன! அது ஆடையைத் துளை செய்யும்; அழிக்கும். அதுதான் அதன் தொழில்; அது இயற்கை. அதற்குப் பயனைப் பற்றிக் கவலை இல்லை.

பட்டாடைக்கும் பருத்தி ஆடைக்கும் மதிப்பறியாது அழிப்பதே தொழிலாகக் கொண்ட அந்த இராமபாணக் கரையான் பூச்சியைப் போன்றவர்கள் என்று குறைகாணும் மக்களை எண்ணி நீ அமைதி கொள்வாயாக!

**பக்தன் :** சுவாமி, தாங்கள் உண்மையைத்தான் அருள் செய்தீர்கள். கல்வியறிவில்லாத மூடர்கள் இவ்வாறு இருப்பின் அந்தப் பூச்சியின் இனத்தவராகக் கொள்ளலாம். ஆனால், நன்கு கற்றவர்கள், அறிஞர்கள் என்று போற்றப்படுபவர்கள். பெரியவர்கள் என்று மதிக்கப்படுபவர்கள் எல்லாம் இத்தகைய கட்டுக்கதை களைப் பரப்புவதில் ஈடுபாடு கொண்டு வாழ்கின்றனரே, அதனை எவ்வாறு பொருட்படுத்தாமல் இருப்பது?

**சுவாமி :** மைந்தா, ஆன்ம ஞானத்தை அறிவதுதான் அறிவு. ஏனைய அறிவெல்லாம் அறிவன்று. அதனால் இவ்வுலக வாழ்வை அறியலாம்; அது வாழ வழிவகுக்கும் அல்லது, அதுவே வழியாகவும் பயன்படும். இத்தகைய அறிவுடன் ஆன்ம ஞானத்தை ஒப்பிடப் பார்ப்பது பெருந்தவறு. சான்றோர் என்பார் பிறரை இகழார். மெய்யறிவு பெறவே வாழ்வெல்லாம் பாடுபடுவர். தான் கண்டது (முயலுக்கு மூன்றே கால்) தான் உண்மை என்ற பகுத்தறிவிலா அகந்தையராலும், ஆன்ம ஞானம் அறியா அறிவிலிகளாலும் தெய்வத் தன்மையை உணரமுடியாது. எனவே, நீ பாராட்டிய பெரியவர்களும், அறிஞர்களும் மேற் குறித்தவர்களின் இனத்தவரே என்று உணர்வாயாக! அத்தகைய எண்ணங்களுக்கும் துன்பங்களுக்கும் இரையாகாது நீ கண்ட உண்மையில் உன்னை வளரவிடுவாயாக!

**பக்தன் :** இத்தகைய மக்களால்தான் ஆஸ்திகர்களும் நாஸ்திகர்களாகின்றனர். அல்லவா, ஸ்வாமி? தாங்கள் கற்ற கல்வியின் உயர்வை அறியாமலும், உண்மையறிய மனமில்லாமலும் வாழும் இவர்கள், தெய்வ புருஷர்களை இகழ்ந்து பேசுகின்றனரே! இவர்கள் வாய் அடைக்க வழியே இல்லையா?

**சுவாமி :** ஏனில்லை. (பன்றி) இனம் தம் இனத்துடன் தானே சேரும் என்பதன்றோ பெரியோர் மொழி. அத் தன்மை வாய்ந்தவர்கள்தான் அத்தகையோர் கூறுவனவற்றைக் கவனிப்பர். நல்ல ஆஸ்திகன் அவர்களுடன் சேரான். அறியாது அவர்களுடன் இணைந்தாலும், அவர்களது சொல்லெல்லாம் கற்பனையானது என்று அறிந்துகொண்டானானால், அக்கணமே அவர் களிடமிருந்து விலகி விடுவான்.

தீயோர்களை அழிக்கும் ஆயுதம் அவர்களது கரத்திலேயே வாழ்கிறது. பஸ்மாசுரனின் வரலாற்றைக் கேள்விப்பட்டதில்லையா? உனக்குத் தெரியாதா? அவன் தனது கரத்தைப் பிறர் தலையில் வைத்த மாத்திரத்தில் அவர்கள் சாம்பலாகி விடுவர். அத்தகைய அழிக்கும் ஆற்றலை அவன் வரமாகப் பெற்றிருந்தான். அவ் வரத்தின் ஆற்றலால் பலரை அழித்து வந்தவன் முடிவில் தானும் அவ்வாற்றலாலேயே அழிந்தான்.

இவ்வாறே, பிறரைப் பழித்து வருபவர் முடிவில் தாங்களும் அப் பழிக்கே ஆளாகிவிடுவர். இவ்வாறு குறை காணுபவரை நான்கு வகையினராகப் பிரிக்கலாம் :

1. இறைவனை அறியும் ஆவலில்லாதவர்.

2. பிறர் முன்னேற்றத்தை கண்டு பொறாமைப்படுவோர்.

3. தாமாகவும் அறியமாட்டாது, பிறரைக் கொண்டும் அறிந்து கொள்ளாது ஒன்றுமே அறியாதவராய் இருந்து கொண்டு, வதந்திகளைக் கொண்டே கட்டுக் கதைகளைக் கற்பனை செய்து பரப்பி, அவைகளுக்குத் தம்மை அடிமைகளாக ஆக்கிக்கொள்ளும் இனத்தவர்.

4. இவ் வுலக இன்பம் தங்களுக்குக் கிடைக்காது போனதற்குக் காரணம், தங்களது விதியின் பயன் என்று உணராது, இறைவனைக் குற்றவாளியாக ஆக்குபவர்.

இந் நான்கு வகையினர்தான் நீ கூறியவாறு குறைகூறி ஆரவாரம் செய்வர். ஏனையோர் செய்யார். பிறர் உருட்டியவாறு ஆடும் (தஞ்சாவூர்ப்) பொம்மை போன்று ஆடார் இத்தகைய கட்டுக் கதைகளைக் கேட்க நேர்ந்தால், அதில் உண்மை உளதா என்று தாங்களே ஆராய்ந்த பின்னர்தான் முடிவு காண்பர். பிறரைப் பழிக்க அவர்கள் அறியார்.

தான் அறிந்த உண்மையில் ஐயங்கொண்டு, பிற தத்துவங்களை அறியாதாரிடம் விளக்கம் கோரிப் பேசுவதனால் யாதொரு நன்மையும் விளையாது. உண்மை கூற வேண்டின், உண்மை ஒரு போதும் விவாதத்தை ஏற்பதில்லை. ஒன்றும் அறியாதவர்கள், குறையாக உணர்ந்தவர்கள் - இவர்களிடம் விவாதித்தால், குருடர்கள் யானையைப் பற்றி அறிந்த பயன்தான் கிட்டும்.

மைந்தா, இதைக் கவனி! இத்தகைய பேச்சுக்களிலே காலத்தைக் கழித்தல் நன்மையா, பழிப்பதும் குறை காண்பதும் இவ் வுலகத்தின் இயற்கை; இயல்பு. இதை அறிந்து, உண்மைப் பக்தர்களாக விரும்புபவர்கள், பேரானந்தத்தைப் பெறும் வழி யாது என்று சிந்திக்க வேண்டும். தங்களுக்கு வாய்த்த

சிறு பொழுதையும் மெய்ஞ்ஞானம் அறியவே பயன்படுத்த வேண்டும். பிறருடைய நன்மை தீமைகளிலே நீ செய்வதற்கு யாதொன்றுமில்லை. காலத்தை வீணே கழிக்காது, தீய எண்ணங்களை யொழித்து நல்லதையே வளர்க்கப் பயன்படுத்த வேண்டும்.

நீ விரும்பும் சாதனையைக் கேள்; அல்லது உண்டான ஐயத்தைக் கேள்; நன்மை பயக்கக் கூடியதைக் கேள்; நன்மை உண்டாகும். இத்தகைய குறை காணுவோரைப் பற்றி எதுவும் கேட்காதே. நீ இதைப் பற்றிய சிந்தனையும் கொள்ளவேண்டாம்.

**பக்தன் :** நானும் மனிதனே ஆகையால் இவ்வாறெல்லாம் கேட்டுவிட்டேன். மன்னியுங்கள். இப்போது தங்கள் அருளால் விளக்கம் உற்றேன். வீரமும், இன்பமும் என் உள்ளத்திலே ஒளிந்திருந்த ஐயத்தையும், துன்பத்தையும் ஓட்டிவிட்டன. அத்தகையோருடன் பேசுவதனால், இப்பொழுது இருக்கும் இந்தக் குறைந்த நம்பிக்கையும், அன்பும், ஆர்வமும் எவ்வாறு குறைகின்றதென்று உணர்ந்து கொண்டேன். இதை நான் அறியாதிருந்தமையினால் தான் தங்களைக் கேட்க வேண்டியதாயிற்று. இனி இவ்வாறு கேளேன். மன்னியுங்கள்.

**சுவாமி :** மிக்க மகிழ்ச்சி. வாய்க்கும் சிறிது நேரத்தையும் வெறும் பேச்சுப் பேசுபவர்களை நினைத்தலிலேயே கழித்தால், நீயும் அக் குறை கூறும் மக்களிலே ஒருவனாவாய். அதனால், பக்தர்களுக்குத் துன்பந்தான். எனவே, நீ நன்கு ஆராய்ந்து பார்! ஒரு முடிவு காண்பாய்! அதை பற்றிக் கொள்! இனி என்றுமே வேறொன்றும் வேண்டியிராது.

ஒருவனுக்கு ஒரேவொரு தீய பழக்கம் இருந்தாலே போதுமானது. அது வளர்ந்துவிடும். தீய குணங்களாகிய சினம் போன்றவற்றையும், துன்பத்தையும் அழிக்கத் தோன்றியதே பக்தி மார்க்கம். அவற்றை வளர்க்க அல்ல.

பழிப்போர்களைக் கவனிப்பதனால் அன்பும், நம்பிக்கையும் மறைகிறது. ஆனால், எத்துணை காலம்?

உன்னால் சொல்ல முடியுமா? உண்மை கண்டபின் நம்புவார்களா? அக் கீழோரின் பேச்சுக்கு மறுபடியும் பெருமை தருவார்களா?

வெண்கலத்தின் ஒலி போன்றது குறை காணுவோர் பேச்சு. தாழ்ந்த உலோகத்திற்குப் பேரொலி உண்டு. தங்கத்திற்கு ஒலியே இல்லை. ஆனால், பெருமைக்குரியது தங்கம்தான். உண்மையான பக்தர்கள் மௌனமாயிருப்பர் ; மௌன வழியைப் பின் பற்றுவர். அவர்களது வாய் இறைவனது பெருங் கீர்த்தியைப் போற்றிய வண்ணம் இருக்கும் அவர்களது செவி பிறருடைய தீச் சொல்லைக் கேளாது. எனவே, வெண்கலத்தைப் போன்ற வெற்றொலியுடைய கீழோரின் பேச்சுக்குச் செவி சாய்க்காதே! ஆனால், உன் செவியை இறைவனின் திருநாமங்களால் நிரப்பு. அதுதான் பிரணவானந்தம்.

அடுத்த மாதம் வரும்பொழுது சாதனைகளைப் பற்றியோ, அநுஷ்டானங்களைப் பற்றியோ விளக்கிக் கொள்ள வா. ஆனால், இத்தகைய சந்தேக மூட்டைகளைச் சுமந்து வராதே!

**பக்தன் :** சுவாமி ! இன்று நான் உண்மையிலேயே அருள் பெற்றவனானேன். அவர்களால் நான் தங்களிடம் ஞானவொளி கண்டேன். "எல்லாம் நன்மைக்கே" என்ற பெரியோர் மொழி, உண்மையான பொன் மொழியாகக் கண்டது இன்றுதான். இனி யார் எதைக் கூறியபோதிலும் 'எல்லாம் என் நன்மைக்கே' என்று ஏற்று, சாந்தமாய் இருப்பேன். குறை கூறேன், காணேன்.

நமஸ்காரம். அடிக்கடி வந்துபோக அருள் புரியுங்கள்.